# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 5-3 - மாசறுசோதி

**(எம்பெருமானது பிரிவு பொறுக்க மாட்டாமல், பராங்குச நாயகி ஆசை மிகுந்து பழிக்கு அஞ்சாமல் மடலூரத் துணிந்ததைக் கூறும் பாசுரம்)**

3139 * மாசறு சோதி * என் செய்யவாய் மணிக் குன்றத்தை *
ஆசறு சீலனை * ஆதிமூர்த்தியை நாடியே **
பாசறவெய்தி * அறிவிழந்து எனை நாளையம்? *
ஏசறும் ஊரவர் கவ்வை * தோழீ! என் செய்யுமே? 1

3140 என் செய்யும் ஊரவர் கவ்வை? * தோழீ! இனி நம்மை *
என் செய்ய தாமரைக் கண்ணன் * என்னை நிறை கொண்டான் **
முன் செய்ய மாமை இழந்து * மேனி மெலிவெய்தி *
என் செய்யவாயும் கருங்கண்ணும் * பயப்பூர்ந்தவே 2

3141 ஊர்ந்த சகடம் உதைத்த பாதத்தன் * பேய் முலை
சார்ந்து * சுவைத்த செவ்வாயன் * என்னை நிறை கொண்டான் **
பேர்ந்தும் பெயர்ந்தும் * அவனோடு அன்றி ஓர் சொல்லிலேன் *
தீர்ந்த என் தோழீ! * என் செய்யும் ஊரவர் கவ்வையே? 3

3142 ஊரவர் கவ்வை எருவிட்டு * அன்னை சொல் நீர் மடுத்து[1] *
ஈர நெல் வித்தி முளைத்த * நெஞ்சப் பெருஞ்செய்யுள் **
பேரமர் காதல் * கடல் புரைய விளைவித்த *
காரமர் மேனி * நம் கண்ணன் தோழீ! கடியனே? 4

3143 கடியன் கொடியன் நெடியமால் * உலகம் கொண்ட
அடியன் * அறிவருமேனி மாயத்தன் ** ஆகிலும்
கொடிய என் நெஞ்சம் * அவனென்றே கிடக்கும் எல்லே! *
துடிகொள் இடை மடத்தோழீ! * அன்னை என் செய்யுமே? 5

3144 அன்னை என் செய்யில் என்? * ஊர் என் சொல்லில் என்? தோழிமீர்! *
என்னை இனி உமக்காசை இல்லை * அகப்பட்டேன் **
முன்னை அமரர் முதல்வன் * வண்துவராபதி
மன்னன் * மணிவண்ணன் * வாசுதேவன் வலையுளே 6

3145 வலையுள் அகப்படுத்து * என்னை நல்நெஞ்சம் கூவிக் கொண்டு *
அலைகடல் பள்ளி அம்மானை * ஆழிப்பிரான் தன்னை **
கலைகொள் அகலல்குல் தோழீ! * நம் கண்களால் கண்டு *
தலையில் வணங்கவுமாங்கொலோ? * தையலார் முன்பே 7

3146 பேய் முலை உண்டு சகடம் பாய்ந்து * மருதிடைப்

[1] படுத்து

போய் முதல் சாய்த்து * புள்வாய் பிளந்து களிறட்ட **
தூமுறுவல் தொண்டைவாய்ப் பிரானை * எந்நாள் கொலோ? *
யாம் உறுகின்றது தோழீ! * அன்னையர் நாணவே 8

3147 நாணும் நிறையும் கவர்ந்து * என்னை நல்நெஞ்சம் கூவிக் கொண்டு *
சேணுயர் வானத்து இருக்கும் * தேவபிரான் தன்னை **
ஆணை என்? தோழீ! * உலகுதோறு அலர் தூற்றி * ஆம்
கோணைகள் செய்து * குதிரியாய் மடல் ஊர்துமே 9

3148 யாம் மடல் ஊர்ந்தும் * எம் ஆழியங்கைப் பிரானுடை *
தூமடல் தண்ணந்துழாய் * மலர் கொண்டு சூடுவோம் **
யாம் மடமின்றித் * தெருவுதோறு அயல் தையலார் *
நாமடங்கப் பழி தூற்றி * நாடும் இரைக்கவே 10

3149 * இரைக்கும் கருங்கடல் வண்ணன் * கண்ணபிரான் தன்னை *
விரைக்கொள் பொழில் * குருகூர்ச்[2] சடகோபன் சொன்ன **
நிரைக்கொள் அந்தாதி * ஓராயிரத்துள் இப்பத்தும் *
உரைக்க வல்லார்க்கு * வைகுந்தமாகும் தம் ஊரெல்லாம் 11

**அடிவரவு:** மாசறு என் ஊர்ந்த ஊர் கடியன் அன்னை வலையுள்
பேய்முலை நாணும் யாம் இரைக்கும் ஊர்

[2] குருகூரவர்